பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 12 வியாழக்கிழமை 25.03.2021 கதிர் 08

## வானில் இருந்து விழுந்து 5 வயது சிறுமி உயிரிழப்பு

முன்பள்ளி மாணவர்களை பாடசாலை நிறைவடைந்து ஏற்றிச் சென்ற வானின் கதவு வழியாக, வீதியில் தவறி விழுந்து 5 வயது சிறுமியொருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

வெல்லவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரந்தகொல்ல ஹுனுகெட்டிய பகுதியில் இன்று நண்பகல் வேளையில்

2

### கொழும்பு அரசின் பழிவாங்கல் ஆரம்பம்

# ஒரே நாளில் 54 இந்திய மீனவர்களை சிறைப்பிடித்தது இலங்கை கடற்படை





(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய மீனவர்கள் 54 பேர், 5 படகுகளுடன் இன்று காலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் ஊடுருவும் நிலையில் கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் நுழைந்த ஒரு படகில் ஏற்பட்ட விபத்தில் 4 இந்திய மீனவர்கள் உயிரிழந்தனர். இதன் பின்பு இன்று காலை இரட்டைமடி இழுவைப் படகு ஒன்றில் இருந்து 14 மீனவர்கள்

2

# யாழ் முடக்கம்

### இன்று மட்டும் தொற்று எண்பதுக்கும் அதிகம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், மார்ச் 25**

**யாழ் நகரில் இன்று மட்டும் எண்பதுக்கும் அதிகமானோருக்கு கொரோனாத் தொற்று கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து யாழ் நகரை நாளை முதல் முழுமையாக முடக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள தாகத் தெரியவருகிறது.**

**நாளை முதல் மறு அறிவித்தல் வரை நகரை முடக்கி பி.சி.ஆர். பரிசோதனைகளை முடுக்கி விட அதிகாரிகள் எண்ணியுள்ளனர்.**

2

## கைதான இந்திய மீனவர்களுக்கு உடன் தூதரக உதவி கிட்டுவதில் இடைஞ்சல்?

கைது செய்யப்பட்ட மீனவர் விவகாரம் மனிதாபிமான ரீதியில் அணுகப்பட வேண்டும் என்றும் தூதரகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அறிக்கை ஒன்றை இன்று முற்பகல் விடுத்தது.

நேற்றிரவுக்குப் பின்னர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட 54 இந்திய மீனவர்களை சந்தித்து, அவர்களுக்கு யாழ்துணைத் தூதரகத்தின் சேவையை வழங்குவதில் இடைஞ்சல் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அதையடுத்தே நாகூக்கான வார்த்தைகளில் அமைந்த அறிக்கை ஒன்றைத் தூதரகம் வெளியிட்டிருக்கின்றது எனவும் அறிய வந்தது.

அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

24 மார்ச் இரவு ஐந்து படகுகளுடன் 54 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கும் தகவல் தூதரகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2

## தடுப்பூசி ஏற்றுமதியை நிறுத்தியது இந்தியா!

### இலங்கைக்குப் பாதிப்பா? இராஜாங்க அமைச்சர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 26

இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் முன்பதிவு செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள் தாமதமின்றி இலங்கையை வந்து சேரும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

2

## வடக்கு உயர் அதிகாரிகள் பலர் தனிமைப்படுத்தலில்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி சபைகளை நவீனமயப்படுத்தல் தொடர்பான இரண்டு நாள் ஆய்வரங்கில் பங்குகொண்ட வடக்கு மாகாணத்தின் அதிஉயர் பதவிகளில் உள்ள அதிகாரிகள் தொடக்கம் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் வரையில் பெருமளவானவர்கள் தனிமைப்படுத்

2

### நாடு திரும்பும் இலங்கையர்களின்

## தனிமைப்படுத்தலுக்காக 10 ஹோட்டல்கள் அறிவிப்பு

கொரோனா 19 வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக மத்திய கிழக்கு உள்ளிட்ட நாடுகளில் இருந்து நாடு திரும்பும்புலம்பெயர் இலங்கைத்தொழிலாளர்களுக்கு இலவசமாக தனிமைப்படுத்தல் நிலையங்களை வழங்க தனியார் துறையில் 10 ஹோட்டல்கள் மற்றும் தனியார் விடுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைக்கு கொரோனா தடுப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி ஒப்புதல்

2

## ஓகஸ்ட் மாகாண சபைத் தேர்தல்?

### விரைவில் அமைச்சரவைப் பத்திரம்

மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் தேவையான சட்டத்திருத்தம் அடங்கிய பிரேரணை இன்னும் இரு வாரங்களில் அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது என அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அமைச்சரவை அனுமதிகிடைக்கப்பெற்ற பின்னர், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கும் உரிய வகையில் நிறைவேறிய பின்னர் ஓகஸ்ட் மாதம் அளவில் தேர்தலை நடத்துவதே அரசின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

சுமார் 3 ஆண்டுகளாக

2

## மேயர் கிளிநொச்சிக்கு



யாழ் மாநகர முதல்வர் Covid 19 நோய்த் தொற்றுக்கான சிகிச்சை பெறுவதற்காக இன்று மதியம் கிளிநொச்சி அழைத்துச் செல்லப்பட்டார்.

# குடாநாட்டில் மீண்டும் முடக்க நிலை ஏற்படாதிருக்க சுகாதாரப் பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்



### மக்களிடம் மாவட்ட அரச அதிபர் வேண்டுகோள்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். குடாநாட்டில் மீண்டும் முடக்க நிலை ஏற்படாதிருக்க பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று மாவட்ட அரச அதிபர் க.மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா அதிகரித்துவரும் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் அண்மைய நாள்களில் கொரோனாத் தொற்று நிலைமை சற்று அதிகரித்த நிலைமை காணப்படுகின்றது.

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## வடக்கு உயர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு நிதி உதவியில் உள்ளூராட்சிசபைகளைநவீனமயப்படுத்தல் தொடர்பான ஆய்வரங்கு யாழ். திருநெல்வேலியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த 23, 24ஆம் திகதிகளில் நடைபெற்றது.

குறித்த விடுதியிலேயே 2 நாள்கள் அதிகாரிகள் தங்கியிருந்து ஆய்வரங்கில் பங்குகொண்டதுடன் விருந்துபசாரங்களிலும் பங்கேற்றனர்.

இந்நிலையில், நேற்று கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் நேற்றுமுன்தினம் பிற்பகல் வரையில் குறித்த கூட்டத்தில் பங்குகொண்டதுடன் அங்கு பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் விருந்துபசாரத்திலும் பங்கேற்றிருக்கின்றார்.

குறித்த ஆய்வரங்கில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர்கள், தலைவர்கள், யாழ். மாநகர ஆணையாளர் உட்பட்ட வடக்கின் உயர் அதிகாரிகள், வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த வடக்கு மாகாண நிர்வாக சேவைக்கு உட்பட்ட அதிகாரிகள் எனப் பலர் பங்குபற்றினர்.

பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களால் குறித்த ஆய்வரங்கில் பங்குகொண்டவர்களை தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

## யாழில் கொரோனா.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதே நேரம் முடக்கப்படும் காலத்தில சுகாதாரத் துறையை மட்டும் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. இது தொடர்பான விவரங்கள் இன்று இரவு 7 மணிக்கு மாவட்டச் செயலாளரினால் ஊடக சந்திப்பின்போது அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனை முடிவு களின் அடிப்படையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் எண் ணிக்கை எண்பதைக் கடந்துள்ளது எனத் தெரியவந்துள்ளது.

குறித்த தொற்றாளர்கள் யாழ். நவீன சந்தைத்தொகுதி மற்றும் திருநெல்வேலி பொதுச்சந்தை ஆகியவற்றில் அடையாளம் காணப்பட்ட வியாபாரிகளுடன் தொடர்பிலிருந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

யாழ். நகர் நவீன சந்தைத் தொகுதி தற்காலிகமாக முடக்கப்படுகின்றது என நேற்றுமுன்தினம் இரவு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கிருந்த வியாபாரிகள் உட்பட்டவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்று மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, திருநெல்வேலி பொதுச்சந்தையும் தற்காலிகமாக முடக்கப்படுவதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அங்கிருந்த வியாபாரிகள் உட்பட்டவர்களிடமும் பி.சி.ஆர். பரிசோதனைகள் இன்று மேற்கொள்ளப்பட்டன. இதன்போதே எண்பதுக்கும் மேற்பட்டோர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 66 பேர் யாழ் நகர வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்களாவர்.

யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களில் இவ்வாறான தீவிர கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்பட்டுள்ளமையால் குடாநாட்டு மக்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையுடன்சுகாதாரநடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றவேண்டும் என்று சுகாதாரத் தரப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## தடுப்பூசி ஏற்றுமதியை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டில் தடுப்பூசிக்கான தேவை அதிகரித்துள்ளதால், ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பணிகளை எதிர்வரும் ஏப்ரல் இறுதி வரை இந்தியா தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

இந்தநிலையில், இலங்கைக்கு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவதில் சிக்கல் ஏற்படுமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், இலங்கைக்குத் தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்படும் என இந்தியா உறுதியளித்துள்ளது என சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதன்படி, இலங்கையால் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்காக முன்பதிவு செய்யப்பட்டுள்ள 10 லட்சம் தடுப்பூசிகள் தாமதமின்றி இலங்கையை வந்து சேரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஓகஸ்ட் மாகாண.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திவைக்கப்பட்டுவரும் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஏற்கனவே பணிப்புரைகளை விடுத்துள்ளனர்.

இதன்படி விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் பூர்வாங்க பணிகளை முன்னெடுத்துள்ளார். கட்சித் தலைவர்களுடனும் இது சம்பந்தமாக அவர் விரைவில் பேச்சு நடத்தவுள்ளார்.

வடக்கு, கிழக்கு உட்பட 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வானில் இருந்து.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கைதான இந்திய.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவர்கள் விவகாரம் மனிதாபிமானத்துடன் அணுகப்பட வேண்டும் என்பதை மீள வலியுறுத்துகின்றோம்.

கைதான மீனவர்களுக்கு விரைந்து அவசரவிநியோகங்களைவழங்குவதும், துணைத் தூதரக சேவைகளை எட்டச் செய்வதும் மிக முக்கியமான விடயங்களாகும்.

இந்த மீனவர்களுக்கு விரைந்து தூதரக சேவையை எட்டச் செய்வதற்கு நாம் இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு காரியமாற்றி வருகின்றோம்.

மீன்பிடி விடயங்களை விரிவாக அணுகுவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான பொறிமுறை நடைமுறையில் உள்ளது.

இணைச் செயற்குழுக்களின் செயலாளர் மட்ட நான்காவது கூட்டம் கடந்த 2020 டிசெம்பர் 30 இல் மெய்நிகர் முறையில் நடைபெற்றமை நினைவு கூரத்தக்கது.

அந்தக் கூட்டத்தின் முடிவுகளின் தொடர் நடவடிக்கைகள் உடனடியாக விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனிமைப்படுத்தலுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தனிமைப்படுத்தல் நிலையங்களாக வெலிகம, ஹிக்கடுவ, வாதுவ, திக்வெல்ல, நீர்கொழும்பு, அஹுங்கம மற்றும் தங்காலை ஆகிய இடங்களில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் தனியார் விடுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் வெலிகம ஜகாபே ரிசோட், பெரடைஸ் பீச் மற்றும் நெப்சூன் ரிசோட், ஹிக்கடுவ ஹிக்கா எப்.என்.ஆர். மற்றும் கொரல் ரீப் கெஸ்ட், வாதுவ ப்ளூ ஸ்ப்ரிங்ஸ், திக்வெல்ல விலா ஜயனந்த, நீர்கொழும்பு கெடமரான், அஹுங்கம ஜயந்தி சாப் மற்றும் தங்காலை சென்டன் ரிசோட் உள்ளிட்ட ஹோட்டல்களில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள் சுய தனிமைப்படுத்தலை மேற்கொள்ள முடியும்.

இந்த தனிமைப்படுத்தல் நிலையங்களில் 5 லட்சத்து 71 ஆயிரம் நபர்கள் தனிமைப்படுத்தல் வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 18 லட்சம் ரூபாவை செலவிடுகின்றது எனத் தொழில்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, மேலே குறிப்பிடப்பட்ட தனிமைப்படுத்தல் ஹோட்டல்களில் தங்கவைக்கப்படுகின்ற நபரொருவருக்காக நாளொன்றுக்கு 4 ஆயிரத்து 500 ரூபா பணம் செலவிடப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, ஹோட்டல் கட்டணங்கள், உணவு உள்ளிட்ட ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டண விவரங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டில் மீண்டும்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று கிடைத்த பி.சி.ஆர். பெறுபேறுகளின்படி சுமார் 37 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் யாழ். நகர் பகுதியில் நேற்று முன்தினம் 9 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து திருநெல்வேலி சந்தை வியாபாரிகளுக்கும் தொற்று இனங்காணப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று 37 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் சேர்த்து மொத்தமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வரை 481 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில் தொற்றுக்குள்ளான 258 பேர் பூரண சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

739 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 892 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தொற்று நிலைமையானது அண்மைய காலங்களிலே தற்போதைய மார்ச் மாதத்தில் உச்சபட்ச நிலைமையில் காணப்படுகின்றது.

மார்ச் மாதத்தில் மாத்திரம் 150 பேருக்குத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. தற்போதைய காலகட்டத்தில் பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டிய காலகட்டமாக காணப்படுகின்றது.

தற்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஏனைய அனைத்துச் செயற்பாடுகளும் வழமைபோல் இடம்பெற்று வருகின்றன.

இடர் காலமாக இருக்கின்ற இந்தக் காலப்பகுதியில் மிகவும் அவதானமாக பொதுமக்கள் செயற்பட வேண்டும். அதேபோல் அரச தனியார் மற்றும் ஏனைய நிறுவனங்களும் தங்களுடைய பாதுகாப்பையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் தங்களுடைய செயற்பாடுகளைச் செயற்படுத்திக்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போதைய காலகட்டத்தில் அரசு விடுகின்ற அறிவுறுத்தல்கள், அதே போல் சமூக இடைவெளி பேணுதல், முகக்கவசம் அணிதல் போன்றவற்றை கிரமமாக பின்பற்றி தங்களையும் தங்களுடைய உறவினர்களையும் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பொதுமக்களுக்கு இருக்கின்றது.

போக்குவரத்தின்போதும் ஏனைய செயற்பாடுகளின்போதும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்படுதல் அவசியமாகும். அத்தோடு அத்தியாவசியமான தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக வீடுகளில் இருந்து வெளியேறுவதைத் தவிர்த்தல் சிறந்தது.

பொதுமக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டல் நடைமுறைகளைப் பின் பற்றி செயற்படுதல் வேண்டும். அத் தோடு பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பும்போதும் சுகாதார நடைமு றைகளைப் பின்பற்றி அனுப்புதல் சாலச் சிறந்தது.

அத்தோடு பெற்றோர்கள் பாடசாலை மாணவர்கள் தொடர்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். அத்தோடு ஏனைய தரப்பினரும் இந்த விடயங்கள் தொடர்பில் அவதானமாகச் செயற்பட வேண்டும். குறிப்பாக திருமண நிகழ்வுகள், மரணவீடுகள் அதேபோன்ற வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள், அரச கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களில் பொதுமக்கள் கூடும்போது மிகவும் அவதானமாகச் சுகாதார நடைமுறைகளை அனுசரித்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின், பொது வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்று செயற்பட வேண்டிய நிலை காணப்படுகிறது

தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குப் பொதுமக்களும் அனைத்துத் தரப்பினரும் இணைந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாவோரின் தொற்று மூலங்கள் இனங்காணப்படுகிறது. எனவே, அது ஒரு சமூகத் தொற்றாகக் கருத முடியாது. ஏற்கனவே சுகாதார வழிகாட்டல்களையும் நடைமுறைகளையும்பொதுமக்களுக்குவழங்கியுள்ளோம். அதேபோல் அனைத்துத் தரப்பினருக்கும் அனுப்பி வைத்துள்ளோம்.

எனவே, அவற்றை முறையாகப் பின்பற்றி அமுல்படுத்தினால் தொற்று நிலைமையிலிருந்து யாழ். மாவட்டத்தை கட்டுப்படுத்த முடியும். யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலைமை யானது ஏனைய மாவட்டங்களிலிருந்து சற்று வித்தியாசமான நிலைமையில் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை கொரோனாத்தொற்றிலிருந்து கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம். எனவே, அந்த ஒத்துழைப்பை பொதுமக்கள் தொடர்ந்து வழங்க வேண்டும்.

இந்த விடயத்தில் சுகாதாரத் தரப்பினருக்குப் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்களுடைய ஒத்துழைப்பு மிக மிக அவசியம்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை சகல நடவடிக்கைகளும் வழமை போன்று இடம்பெறுகின்ற நிலையில் பெரும் தொற்று ஏற்படும் நிலைமையானது மீண்டும் முடக்கத்தை ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். எனவே, இது மக்களை அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு கிடைப்பதன் மூலம் முடக்க நிலைமையைக் கட்டுப்படுத்தி தொற்று நிலைமையில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் – என்றார்.

## ஒரே நாளில் 54.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுந்தீவுக்கு அன்மையிலும், கிளிநொச்சி, பூநகரி – இரணைதீவு கடற்பரப்புக்குள் நுழைந்த இரு படகுகளில் 20மீனவர்களும்கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படையினரால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்ட கடல் எல்லைக்குள் நுழைந்த இரு படகில் 20 மீனவர்களுமாகவே மொத்தம் 54 இந்திய மீனவர்கள் இன்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் விவரங்கள் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களங்கள் ஊடாக நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்து 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கான அனுமதி பெறப்படவுள்ளது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இந்தியா, இலங்கையை ஆதரித்து தீர்மானத்தை எதிர்க்கும் என்று கொழும்பு அரசு நம்பியிருந்தது. எனினும், தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலைமை வகித்திருந்தது. இது கொழும்பு அரசை கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது. இதற்குப் பழிவாங்கும் வகையிலேயே ஒரே நாளில் 54 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறைப்பிடித்துள்ளனர் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஒரு தீர்மானம்: இரண்டு பார்வைகள்

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பு நீதிமன்றத்தை நிறுவி உள்ளக விசாரணையை இலங்கை முன்னெடுக்காவிட்டால் சர்வதேசப் பொறிமுறை செயற்படத் தொடங்கி விடும்.

– இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும் மூத்த இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக.

தமிழர் அரசியலுடன் நன்கு பரிச்சயமுள்ளவர் இவர். 1988 இல் இணைந்த வடக்கு,கிழக்கு மாகாண சபை அமைந்த போது, ஆட்சியைப் பிடித்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இவரையும் அந்த மாகாண சபையின் ஓர் அமைச்சராக நியமித்திருந்தது.

சில யதார்த்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

அதையே அவர் இலங்கைக்கான எச்சரிக்கையாகத் தெரிவிக்க, அதே விடயத்தை இலங்கைக்கு சாதகமான அம்சமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. சுட்டிக்காட்டுகின்றார்.

தயான் ஜெயதிலகவின் கருத்துப்படி –

* இலங்கை விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யும். 2022 செப்ரெம்பர் வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

* சர்வதேச விசாரணை நடவழக்கைகள் ஆரம்பமாகாமல் தடுப்பதற்கு இலங்கைக்கு இன்னும் வாய்ப்புகள் உண்டு. வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் சிறப்பு நீதிமன்றத்தை நிறுவி உலகம் ஏற்றுக் கொள்கின்றவர்களை நீதிபதிகளாக உள்ளடக்கி, ஒரு விசாரணைப் பொறிமுறையை ஸ்தாபித்து, தவறிழைத்தவர்களுக்குத் தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை விரைந்து செயற்பட வேண்டும்.

*அவ்வாறு செய்யாவிட்டால் சர்வதேசப் பொறிமுறை செயற்பட ஆரம்பித்து விடும். இலங்கை விவகாரம் ஏற்கனவே சர்வதேச மயப்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் பொறிமுறை செயற்படவில்லை. இலங்கை உரிய முறையில் செயற்படத் தவறினால் அந்தப் பொறிமுறை செயற்படத் தொடங்கி விடும். அது செயற்படத் தொடங்கினால் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது.

– இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தயான் ஜயதிலக.

அதாவது, இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் குறித்து, நீதி முறையான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, குற்றமிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டும் நடவடிக்கையை வெளிநாட்டுப் பொறிமுறையிடம் கையளிக்காமல், உள்ளகப் பொறிமுறை மூலம் அதை முன்னெடுப்பதற்கு இலங்கைக்கு இன்னும் வாய்ப்புண்டு. அதனை இலங்கை நேர்மையாக – உண்மையாக – செய்யுமானால் சர்வதேச பொறிமுறை செயற்படுவதைத் தடுக்க முடியும் என்பதே தயான் ஜயதிலகவின் எச்சரிக்கை.

ஆனால், 'பார்த்தீர்களா, இலங்கையில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கான விசாரணைப் பொறிமுறையை இலங்கை ஆரம்பிப்பதற்கு இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றிய தீர்மானத்தில் இடமளிக்கப்பட்டிருக்கின்றது. குற்றமிழைத்த தரப்பைக் கொண்டே அந்தக் குற்றம் பற்றிய நீதி விசாரணையை நடத்தும்படி கோரும் கேலிக் கூத்தான தீர்மானமே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இப்போது இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றது'– என்று கூக்குரலிடுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் பற்றிய விடயங்களை விசாரிப்பதற்கான பொறிமுறை தொடர்பில் – ஒரே விவகாரம் தொடர்பில் – இரு வேறுபட்ட பிரமுகர்களின் பார்வை எப்படி உள்ளது என்பது நோக்கத்தக்கது.

இலங்கையின் யுத்த காலத்தில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பான விவரங்களைச் சேமித்து, சாட்சியங்களைப் பதிந்து, ஆவணங்களை சேகரித்துச் செயற்படுத்துவதற்கு ஐ.நாவின் கண்காணிப்பில் மையம் ஒன்றுக்கும் இந்தத் தீர்மானம் வழி செய்துள்ளது.

அவ்வாறான ஆவணக் காப்பகம் உருவாக்கப்பட்டால், யுத்தக் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டோர் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அந்தந்த நாடுகளில் அவர்களுக்கு எதிராக சர்வதேச நீதி நியாயாதிக்கத்தின் கீழ் குற்றவியல் விசாரணைகள் இடம்பெறும் ஆபத்து உண்டு.

அது மாத்திரமல்ல, இந்தத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக அடுத்த கட்ட நடவடிக்கையாக இலங்கையில் முதலீடு, சுற்றுலாத்துறை போன்றவற்றில் சர்வதேச நாடுகளினால் இறுக்கமான போக்குக் கடைப்பிடிக்கப்படும் ஆபத்து உள்ளது என்றும் தயான் ஜயதிலக எச்சரிக்கின்றார்.

சர்வதேச ஊடாட்டங்களை கையாளும் தந்திரோபாயத்துக்குள்ளும் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறி அல்லது மேலாண்மைத் திமிர் புகுந்ததன் விளைவை நாடு சந்தித்தேயாக வேண்டியிருக்கும். இது, தவிர்த்திருக்கக் கூடிய – இனித் தவிர்க்க முடியாததாக மாறிவிட்ட – வினை.

# வீட்டுத் திட்ட நிதியை முழுமையாக வழங்கக் கோரி யாழில் போராட்டம்!





யாழ்ப்பாணம், மார்ச் 25

வீட்டுத் திட்டத்துக்கான நிதியை முழுமையாக வழங்குமாறு கோரி யாழில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று (புதன்கிழமை) காலை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் – மானிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு, ஆனைக்கோட்டை ஜே/132 மற்றும் ஜே/133 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 2018ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் ஏழரை லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது.

அதில், இரண்டு கட்டங்களாக ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி மட்டுமே தற்போது வரை வழங்கப்பட்டுள்ளதாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அரைகுறை வீட்டில் வசித்து வருகின்றன எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும், இது தொடர்பாக அரசாங்க அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளும்போது அவர்கள் ஒவ்வொருவரும் வேறு ஒருவர் மீது பழி போட்டுவிட்டு தப்பிக்கொள்கின்றனர் என மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தை வழங்கும்போது தாங்கள் வசித்து வந்த தற்காலிக வீடுகளை இடித்துவிட்டே, குறித்த புதிய வீட்டுத் திட்டத்தை மேற்கொண்டதாகவும், தற்போது வசிப்பதற்கு இடமின்றி வெயில் மற்றும் மழைக்கு மத்தியில் அரைகுறை வீடுகளில் வசித்து வருகின்றனர் எனவும் மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தமக்குரிய நிலுவையாகவுள்ள நிதியை விரைவாகப் பெற்றுத்தருமாறு கோரியுள்ள மக்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் , தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கான தமது கோரிக்கை அடங்கிய மகஜரைக் கையளித்துள்ளனர்.

# யாழ். பல்கலையில் யோகர்சுவாமி குருபூசை





ஈழத்துச் சித்தர் தவத்திரு யோகர் சுவாமிகளின் குரு பூசை – பங்குனி ஆயிலிய தினமான இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையில் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடாதிபதி கலாநிதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, கலைப் பீடாதிபதி கலாநிதி கே. சுதாகர், நிதியாளர், வேலைத்தளப் பொறியியலாளர், முன்னாள் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

சிவ யோகர் சுவாமிகளின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, ஆராதனைகள் இடம் பெற்றன. இன்றைய நாளில் 60 ஆவது அகவை காணும் துணைவேந்தருக்கு இந்து நாகரிகத் துறையினர் பொன்னாடை போர்த்தி கௌரவமளித்தனர்.

# காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் பகிர்ந்தளிக்க முடியாது!



ஒரு தரப்பினரை திருப்திப்படுத்தும் வகையில் காணி,பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என தேசிய மரபுரிமைகள், கலைகலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

கொவிட்–19 வைரஸ் தாக்கத்தால் பொருளாதார மட்டத்தில் பல சவால்கள் தோற்றம் பெற்றுள்ளன. மக்களின் வாழ்க்கை செலவுகளும் அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றதாகும். மாகாண சபை முறைமை இனப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் பிற்பட்ட காலத்தில் அவை பல முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை திட்டமிட்ட வகையில் பிற்போட்டது. மாகாண சபைகளின் நிர்வாகம் ஜனாதிபதியின் பிரதிநிதிகள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களை காட்டிலும் தற்போது மாகாண சபைகளின் நிர்வாகம் ஆளுநர்களால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தல் அவசியமா இல்லையா என்பதில் மக்களின் அபிப்பிராயத்தை பெற்றுக் கொள்வது அவசியாகும் என்பதை தெரிவித்துள்ளோம்.

மாகாண சபை முறைமை வீண் செலவுகளை ஏற்படுத்தும் ஒரு முறைமையாகக் காணப்படுகிறது என்பதே பெரும்பாலான மக்களின் அபிப்பிராயமாகக் கணப்படுகிறது. மாகாண சபை விவகாரத்தில் இந்தியாவின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியம் என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றமை முற்றிலும் தவறானதொரு கருத்தாகும்.

நாட்டின் உள்ளக விவகாரங்கள் தொடர்பில் இந்தியாவின் ஆலோசனைகளைப் பெறுவது அவசியமற்றது. நாட்டு மக்களின் அபிப்பிராயத்துக்கு அமையவே அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியும்.

மாகாண சபை விவகாரத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுகின்றமை அவசியமானதாகும். மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதற்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். ஒரு தரப்பினரை திருப்திப்படுத்தும் வகையில் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.கவின் தேர்தல் பிரசாரம் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி!



சேலத்தில் நடைபெறவுள்ள தி.மு.கவின் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்கிறார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து சேலம், சீலன்நாயக்கன்பட்டியில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பொதுக்கூட்டத்திற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். குறித்த கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இந்தக் கூட்டத்தில் கூட்டணிக் கட்சிகளை சேர்ந்த தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, திராவிட கழக தலைவர் கி.வீரமணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

# வெளிநாடு வாழ் இந்தியர்கள் வாக்களிப்பது சட்டப்பேரவைத் தேர்தலில் சாத்தியமில்லை

## மத்திய சட்டத்துறை அமைச்சர் ரவிசங்கர் தெரிவிப்பு

மாநில சட்டசபைத் தேர்தல்களில் வெளிநாட்டுவாழ் இந்தியர்களுக்கு தபால் வாக்களிப்பு வசதியை அளிப்பது சாத்தியம் இல்லை என மக்களவையில் மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்.

தமிழகம் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் விரைவில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ளது. தபால் வாக்குகள் இந்த தேர்தலில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய இந்திய தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோரா, வெளிநாடு வாழ் இந்தியர்கள் தேர்தலில் வாக்களிக்கும் திட்டம் அடுத்த ஓராண்டிற்குள் அமுல்படுத்தப்படலாம் என தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த மத்திய சட்டத்துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், விரைவில் நடக்க இருக்கின்ற ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்துவது சாத்தியமில்லை என தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எழுத்து பூர்வமாக அவர் அளித்த பதிலில், 'வெளிநாடு வாழ் இந்தியர்கள் வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் களைவது தொடர்பாக வெளியுறவுத்துறை



அமைச்சகத்துடன் பேச்சு நடந்து வருவதால், வரவிருக்கும் மாநில தேர்தல்களில் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்து வது சாத்தியமில்லாதது' எனக் கூறியுள்ளார்.

# ஏப்ரல் 6 அன்று நேர்மைக்கு வாய்ப்புத் தரவேண்டும்

## கமல் கோரிக்கை

தமிழகத்தைச் சீரமைக்கும் நற்பணிக்கு உங்கள் அனைவரின் உதவியும் தேவை என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்கூறியுள்ளார். கோவை தெற்கு தொகுதியில் போட்டியிடும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல் ஹாசன் மக்களைச் சந்தித்து உரையாற்றினார்.



அங்கு, நான் இங்கு அடிக்கடி வர வேண்டியிருக்கும். வந்து கொண்டு இருப்பேன். தமிழகத்தைச் சீரமைக்க வேண்டிய பொறுப்புள்ளதால், வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. 234 தொகுதிகளிலும் பிரசாரம் செய்து வருகிறேன். நான் வெவ்வேறு தொகுதிகளில் இருந்தாலும் மனம் இங்கு தான் உள்ளது. தொகுதிக்கு ஏற்ப தேர்தல் அறிக்கையை தயார் செய்து வருகிறோம். அதில், மக்களிடம் கேட்கப்படும் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

நாங்கள் செயல்படுத்தும் திட்டங்களுக்கு உங்களின் உதவியும் தேவைப்படுகிறது. தமிழகத்தை சீரமைக்கும் பணியில் நான் மட்டும் தனி நபராக செயற்பட முடியாது. உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

நேர்மை என்பதை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். ஏப்ரல் 6 அன்று நேர்மைக்கு வாய்ப்புத் தரவேண்டும். என்னைப் பற்றி விமர்சனம் செய்பவர்கள், வெளியில் இருந்து வருகிறார். இங்கு இருக்க மாட்டார் எனக் கூறுகின்றனர். ஆனால், அப்படிக் கூறுபவரே மயிலாப்பூரைச் சேர்ந்தவர்தான் என்று கூறினார் கமல்ஹாசன்.

# மம்தா குறித்த கிண்டல் சர்ச்சையாகியுள்ள பா.ஜ.க. பிரமுகரின் பேச்சு!



"கட்டுப்போட்ட காலைக் காட்ட வேண்டுமானால் அதற்கு பர்முடாஸ் போட்டு வரலாமே?" என மம்தா குறித்து பா.ஜ.க. பிரமுகர் திலீப் கோஷ் பேசியது சர்ச்சையாகி உள்ளது.

மேற்கு வங்க மாநில முதல்வரும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சித் தலைவருமான மம்தா பானர்ஜி கடந்த 10 ஆம் திகதி நந்திகிராம் தொகுதியில் மேற்கொண்ட பிரசாரத்தின் போது காயமடைந்தார். அவரை சில பேர் தாக்கியதாக மம்தா குற்றஞ்சாட்டுகிறார். இதன் பின்னணியில் பா.ஜ.க. சதி செய்திருப்பதாகவும் அவர்கூறிஉள்ளார். காயம் காரணமாக, கடந்த 10 ஆம் திகதி முதல் காலில் கட்டுடன் சக்கர நாற்காலியில் அமர்ந்தபடியே அவர் பிரசாரம் செய்து வருகிறார்.

இது குறித்து புருலியா மாவட்டத்தில் நடந்த பிரசார கூட்டத்தில் பேசிய அம் மாநில பா.ஜ.க. தலைவர் திலீப் கோஷ், "கட்டுப்போட்ட காலை எல்லோருக்கும் காட்ட வேண்டுமென முதல்வர் மம்தா நினைக்கிறார். அதற்கு அவர் தழையத் தழையபுடைவைகட்டுவதற்குப் பதிலாக, பேசாமல் பர்முடாஸ்போட்டுக்கொண்டால் என்ன? அவரை மாதிரி யாரும் சேலையை தொங்க விட்டு நான் பார்த்ததில்லை," என்றார். இவரது பேச்சு கடும் சர்ச்சையாகி உள்ளது.

# சர்வதேச விமானப் போக்குவரத்து தடை மேலும் நீடிக்கப்பட்டது



சர்வதேச விமானப் போக்குவரத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடை ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக இந்திய விமானப் போக்குவரத்து இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

கொரோனா பரவல் அச்சம் காரணமாக கடந்த வருடம் மார்ச் மாதம் சர்வதேச விமானப் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டது. குறித்த தடை தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தடை விதிக்கப்பட்ட குறித்த காலப்பகுதியில் 'வந்தே பாரத்' திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் சிக்கியிருக்கும் இந்தியர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். இதனையடுத்து தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான விமான சேவைகள் அத்தியாவசிய தேவைகளைக் கருத்தில் கொண்டு நடைபெற்று வருகின்றன. அதேநேரம் இடர்க்காலத்தில் பணியாற்றிட அங்கீகரிக்கப்பட்ட விமான சேவைகள் மற்றும் சரக்கு விமானங்கள் தொடர்ந்து இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மகாராஷ்டிராவில் தீவிரம் காட்டும் கொரோனா அமைச்சருக்கு 2 ஆவது முறையும் உறுதி

மகாராஷ்டிரா அமைச்சர் தனஞ்சய் முண்டேக்கு 2 ஆவது முறையாக கொரோனாத் தொற்று உறுதியான நிலையில் ஏறத்தாழ 10 மாதங்களுக்குப் பின் மீண்டும் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் கொரோனா தினசரி பாதிப்புகள் அதிகரித்து வரும் நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் 28,699 பேருக்கு புதியதாக தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதேபோல் கடந்த 24 மணி நேரத்தில் 132 பேர் நோய்த் தொற்றால் இறந்துள்ளனர். நாட்டிலேயே கொரோனாத் தொற்று வேகமாக பரவும் மாநிலங்கள் பட்டியலில் மகாராஷ்டிரா உள்ளது.

இந்நிலையில், தேசியவாத காங்கிரஸ் மூத்த தலைவரும், மாநில சமூக நீதித்துறை அமைச்சருமான தனஞ்சய் முண்டே வெளியிட்ட டுவிட்டர் பதிவில், 'எனக்கு நடத்தப்பட்ட கொரோனா சோதனையில் தொற்று உறுதியாகி உள்ளது. ஏற்கனவே கடந்தாண்டு ஜூன் மாதம் எனக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டது. சிகிச்சைக்கு பின் பணிக்குத் திரும்பிய என்னை மீண்டும் தொற்று பாதித்துள்ளது. எனவே, கடந்த சில நாள்களாக என்னுடன் தொடர்பு கொண்ட அனைவரும் கொரோனா பரிசோதனைக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றபடி கவலைப்படும் அளவிற்கு பாதிப்பில்லை. மருத்துவர்களின் ஆலோசனையின்படி தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை பெற்றுவருகிறேன். பொதுமக்கள் ஒவ்வொருவரும் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை பின்பற்றி அவரவர் தங்களை கவனித்துக்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# வேளாண் சட்டங்களுக்கு எதிரான முழு அடைப்பு பா.ஜ.க.வின் கூட்டணிக்கட்சியும் பங்கேற்கிறது

மத்திய அரசின் வேளாண் சட்டங்களுக்கு எதிராக நாளை நடக்கவுள்ள நாடு தழுவிய முழு அடைப்பு போராட்டத்தில், மத்திய பா.ஜ.கவை ஆதரித்து வரும் ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டியின் கட்சியும் பங்கேற்கிறது.

மத்திய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக டெல்லியில் கடந்தாண்டு நவம்பர் 26ஆம் திகதி முதல் விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக விவசாய சங்கங்களுடன் மத்திய அரசு நடத்திய 11 கட்ட பேச்சும் தோல்வியில் முடிந்தன.

இந்தப் போராட்டத்தின் ஒருபகுதியாக, கடந்த ஜனவரி 26 ஆம் திகதி குடியரசுத் தினத்தன்று விவசாயிகள் நடத்திய டிராக்டர் பேரணியில் கலவரம் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் விவசாயிகளுடன் மத்திய அரசு பேச்சு நடத்தவில்லை.

இந்நிலையில், விவசாயிகள் போராட்டம் தொடங்கி வரும் 26 ஆம் திகதியுடன் 4 மாதங்கள் நிறைவடையவுள்ளன. இதனைக் குறிக்கும் விதமாக, அன்றைய தினம்



நாடுதழுவிய வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடப்போவதாக விவசாய சங்கங்கள் அறிவித்துள்ளன.

இந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், மத்திய பா.ஜ.கவுடன் நெருக்கமாக உள்ள ஆந்திர மாநில முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி முழு அடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஆந்திர பிரதேச மாநில அமைச்சர் பெர்னி வெங்கட்ராமய்யா அமராவதியில் கூறுகையில், 'விசாகப்பட்டினம் உருக்கு ஆலையை தனியார் மயமாக்கும் மத்திய அரசின் முடிவை எதிர்க்கிறோம். அதற்காக வரும் 26ஆம் திகதி வேளாண் சட்டங்களை எதிர்த்துப் போராடும் விவசாய சங்கங்களுக்கு ஆதரவாகவும், விசாகப்பட்டினம் உருக்கு ஆலையை தனியார் மயமாக்கும் மத்திய அரசின் முடிவை கண்டித்தும் ஆந்திராவில் ஆளும் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி முழு அடைப்புப் போராட்டத்தில் பங்கேற்கும்.

விசாகப்பட்டினம் உருக்கு ஆலையை தனியார்மயமாக்கும் முடிவை எதிர்த்து ஏற்கனவே மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது. ஆந்திர மக்களின் உரிமை மற்றும் லட்சக்கணக்கான தெலுங்கு மக்களின் விருப்பத்திற்கு மாறாக விசாகப்பட்டினம் உருக்கு ஆலையை தனியார் மயமாக்க விடமாட்டோம்.

ஏனெனில், மாநிலத்தில் உருக்கு ஆலை நிறுவுவதற்கு, தெலுங்கு மக்கள் மாபெரும் தியாகங்களை செய்துள்ளனர். எனவே, பொதுமக்களுக்கு இடையூறின்றி அமைதியான முறையில் முழு அடைப்புப் போராட்டத்தை விவசாயிகள் சங்கங்களோடு இணைந்து வை.எஸ்.ஆர். கட்சி கடைப்பிடிக்கும். அதேநேரம் முழு அடைப்புப் போராட்டம் நடக்கும் நாளில், மதியம் 1 மணிக்கு பிறகு அனைத்து அரசு பஸ்களும் இயக்கப்படும். அனைத்து அவசர சுகாதார சேவைகளும் வழக்கம் போல் செயல்படும்' என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வட கொரியா வீசிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளால் கிழக்காசிய நாடுகள் பதற்றம்



வட கொரியா ஏவிய இரண்டு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளால் கிழக்காசிய நாடுகள் பதற்றம் அடைந்துள்ளன.

தனது கிழக்கு கடற்கரையில் இருந்து இந்த இரண்டு ஏவுகணைகளையும் வட கொரியா ஏவியது என ஜப்பான் பிரதமர் சுகா யோஷிஹைட் தெரிவித்துள்ளார்.

வட கொரியாவின் ஏவுகணைகள் ஜப்பானுக்குச் சொந்தமான சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு வெளியே விழுந்ததாக அவர் கூறினார். இந்த தகவலை தென் கொரியாவும், அமெரிக்காவும் உறுதி செய்துள்ளன.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் தீர்மானத்தின்படி, கண்டம் விட்டும் கண்டம் பாயும் ஏவுகணைகளை தயாரிக்கக்கூடாது என வட கொரியா மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரேசிலில் மீண்டும் உச்சம் தொட்ட கொரோனா ஒரே நாளில் 90 ஆயிரம் பேருக்கு தொற்று பாதிப்பு



பிரேஸில் நாட்டில் நேற்று ஒரே நாளில் 90 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

உலகையே அச்சுறுத்தி வரும் பெருந்தொற்று கடந்த சில வாரங்களாக குறைந்து காணப்பட்டது. இந்நிலையில் பிரேஸில், இந்தியா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் தொற்று அதிகரித்து வருகிறது.

தற்போது கொரோனாவால் உலகிலேயே அதிகம் பேர் பாதிக்கப்பட்ட நாடாக பிரேஸில் உள்ளது. அந்நாட்டில் இதுவரை ஒரு கோடியே 22 லட்சத்து 27 ஆயிரம் பேர் கொல்லுயிரியால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் 2 ஆயிரத்து 244 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து இதுவரை 3 லட்சத்துக்கும் அதிகமானோர் கொரோனாவால் மரணித்துள்ளனர்.

## 7 வயது சிறுமியையும் சுட்டுக் கொன்ற இராணுவம்



மியன்மாரில் ராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. அதேவேளையில் இந்தப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு இராணுவம் அடக்குமுறையைக் கையாண்டு வருகிறது. ஆட்சிக் கவிழ்ப்பு நடந்த பெப்ரவரி 1 முதல் இப்போது வரை 260க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என அந்த நாட்டின் சிவில் உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

பகலில் போராட்டக்காரர்களை விரட்டியடிக்கும் இராணுவம் இரவு நேரத்தில் அவர்களை வீடு புகுந்து கைது செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறது.

அந்தவகையில் நேற்றுமுன்தினம் இரவு மண்டலே நகரில் உள்ள வீடுகளுக்குள் இராணுவ வீரர்கள் அதிரடியாக நுழைந்து போராட்டக்காரர்களை கைது செய்தனர். அப்போது மவுங் கோ ஹாஷின் பா என்பவரை கைது செய்ய இராணுவ வீரர்கள் அவரது வீட்டுக்குள் நுழைந்தனர். அப்போது மவுங் கோ ஹாஷின் பாவின் 7வயது மகள் கின் மோ சிட் இராணுவ வீரர்களைக் கண்டு பயந்து தனது தந்தையை நோக்கி ஓடினாள். அப்போது ராணுவ வீரர்கள் திடீரென துப்பாக்கியால் சுட்டதாக தெரிகிறது. இதில் சிறுமி கின் மோ சிட்டின் உடலில் துப்பாக்கி குண்டுகள் துளைத்து சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் சரிந்து துடிதுடித்து இறந்தாள்.

7 வயது சிறுமி இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அங்கு கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இதுகுறித்து இராணுவம் உடனடியாக எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. அதேசமயம் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்ட 628 பேரை நேற்று இராணுவம் விடுதலை செய்தது. இவர்களில் பெரும்பாலானவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் ஆவர்.

## அமெரிக்க துணை சுகாதாரத்துறை அமைச்சராக திருநங்கை நியமனம்

அமெரிக்க ஜனாதிபதி பைடன் அமைச்சரவையின் துணை சுகாதாரத்துறை பதவிக்கு திருநங்கை பெண்ணான டாக்டர் ரேச்சல் லெவின் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க வரலாற்றிலேயே முதல் முறையாக ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தில் இந்த நியமனம் நிகழ்ந்துள்ளது. இந்த நியமனத்துக்கு குடியரசு கட்சியினர் மத்தியில் கடுமையான எதிர்ப்பு இருந்த நிலையில், பிரேரணை செனட் சபையில் நேற்று புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. ரேச்சல் லெவின் 52 க்கு 48 என்ற ஆதரவு வாக்குகள் வித்தியாசத்தில் முதல் துணை



சுகாதாரத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் செனட்டால் அங்கீகரிக்கப்பட்ட முதல் வெளிப்படையான திருநங்கை தனிநபராகவும், மிக உயர்ந்த தரத்தில் முதல் திருநங்கை பெடரல் அதிகாரியாகவும் திகழ்கிறார். லெவின் முன்னர் பென்சில்வேனியாவின் சுகாதார செயலாளராக இருந்தார். அவர் மாநில மற்றும் பிராந்திய சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும் இருந்தார். கடந்த வாரம் செனட், கலிபோர்னியா அட்டர்னி ஜெனரல் சேவியர் பெக்கெராவை புதிய சுகாதார செயலாளராக உறுதிப்படுத்தியது. இவர் இந்த துறைக்கு தலைமை பொறுப்பேற்கும் முதல் இலத்தீன் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது.

## போட்ஸ்வானாவில் சில நாள்களில் 39 யானைகள் திடீரென உயிரிழப்பு



ஆப்பிரிக்க நாடான போட்ஸ்வானாவில் மீண்டும் யானைகள் தொடர்ந்து உயிரிழந்து வருவது இயற்கை ஆர்வலர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

உலகில் அதிகம் யானைகள் வாழும் நாடு போட்ஸ்வானா. இங்குள்ள மோரேமி ஷேகம் காப்புக் காடுகள் பகுதியில் கடந்த சில தினங்களாக 39க்கும் மேற்பட்ட யானைகள் இறந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

யானைகளின் உடலில் தந்தங்கள் அப்படியே இருந்ததால் வேட்டையாடப்படவில்லை என அதிகாரிகள் கூறினர்.

அவைகளின் உடலை ஆய்வுக்கு உட்படுத்திய போது நச்சு நுண்ணுயிர்கள் காரணமாக அவை உயிரிழந்தமை தெரியவந்தது. முன்னதாக கடந்த ஆண்டு ஒகவாங்கோ வனப்பகுதியில் 330 யானைகள் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து ராணி எலிசபெத்துக்கு 10 ஆவது கொள்ளுப்பேர குழந்தை

இங்கிலாந்து ராணி 2 ஆம் எலிசபெத்தின் மகள் வழி பேத்தியும் இளவரசியுமான சாரா டின்டாலுக்கு நேற்று அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு லூகாஸ் பிலிப் டின்டால் என பெயரிடப்பட்டுள்ளது.

இது இளவரசி சாரா டின்டால் இங்கிலாந்து ரக்பி வீரர் மைக் டின்டால் தம்பதியின் 3 ஆவது குழந்தையாகும். ஏற்கனவே இந்த தம்பதிக்கு 7 வயதில் ஒரு மகனும், 2 வயதில் ஒரு மகளும் உள்ளனர்.

இளவரசி சாரா டின்டால் அரண்மனையின் குளியலறையில் இருந்தபோது அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டதாகவும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல முடியாத நிலையில் குளியல் அறையிலேயே அவர் குழந்தை பெற்றெடுத்ததாகவும் மைக் டின்டால் கூறினார்.

லூகாஸ் பிலிப் டின்டால், இங்கிலாந்து ராணி 2ஆம் எலிசபெத்தின் 10 ஆவது கொள்ளுப் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொவிஷீல்ட் மருந்து ஏற்றுமதிக்கு தற்காலிகத் தடை இந்தியாவின் முடிவால் உலக நாடுகள் அதிர்ச்சி!

உலகிலேயே மிகப் பெரிய கொரோனா தடுப்பூசி தயாரிப்பாளரான இந்தியாவின் சீரம் இன்ஸ்டிட்யூட் நிறுவனம், ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகாவின் கொவிஷீல்ட் தடுப்பு மருந்தை ஏற்றுமதி செய்வதை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது. இந்த மருந்தின் ஏற்றுமதிக்கான தடையை இந்திய அரசு விதித்திருப்பதாக இந்தியாவின் மத்திய வெளிவிவகாரத் துறை அமைச்சக வட்டாரத்தினர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், வரும் வாரங்களில் உள்நாட்டில் கொரோனா தடுப்பூசிக்கான தேவை அதிகரிக்கும் என்றும் இதனாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தற்காலிக ஏற்றுமதித் தடையால் வரும் ஏப்ரல் மாத இறுதி வரை மருந்தின் சர்வதேச விநியோகம் பாதிக்கப்படலாம் என்றும் உலக சுகாதார அமைப்பின் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் இருக்கும் 190 நாடுகள் பிரச்சினைகளை எதிர்நோக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

உலகில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் சீரான முறையில் கொரோனாத் தடுப்பு மருந்து விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதுதான் இந்த கொவெக்ஸ் திட்டத்தின் நோக்கமாகும்.

கடந்த சில நாள்களில் பிரிட்டன், பிரேஸில் உட்பட பல நாடுகளுக்கு அனுப்ப வேண்டிய அஸ்ட்ராஜெனெகா கொரோனாத் தடுப்பூசித் தொகுதிகளை சீரம் இன்ஸ்டிட்யூட் நிறுவனம் தாமதப்படுத்தியிருந்தது.

இதுவரை இந்தியா, 6 கோடி கொரோனா தடுப்பு மருந்து டோஸ்களை 76 நாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. இதில் பெரும்பாலான தொகுதிகள் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா மருந்துகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் ஏற்றுமதித் தடையினால் குறைந்த வருமானம் உள்ள 64 நாடுகளுக்கு கொரோனா தடுப்பு மருந்துகளை அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்படும் என யுனிசெப் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. தடுப்பு மருந்துகளைக் கூடிய விரைவில் அனுப்பி வைக்க இந்திய அரசுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

## மெக்சிகோவில் முகக்கவசம் போல் மூக்குக் கவசம் அணியும் மக்கள்



மெக்சிக்கோவில் முக கவசம் போன்று மூக்கு கவசத்தை உருவாக்கி உள்ளனர்.

உலகம் முழுவதும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக முக கவசம் அணிய அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இந்த நிலையில் மெக்சிகோவில் முக கவசம் போன்று மூக்கு கவசத்தை உருவாக்கி உள்ளனர்.

உணவு மற்றும் தண்ணீர் அருந்தும் போது பாதுகாப்பாக இருக்க மூக்கு பகுதியை மட்டும் மறைக்கும் அளவுக்கு சிறிய அளவிலான மூக்கு கவசத்தை உருவாக்கி உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுலோகங்களை ஏந்தி வீதிக்கு இறங்கிய சுகாதாரத்துறையினர்

சம்மாந்துறை,மார்ச் 25

மக்களிடையே காச நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 ஆம் திகதி சர்வதேசரீதியாக உலகக் காசநோய் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையம் இணைந்து நடத்திய காச நோய் தொடர்பிலான விழிப்புணர்வு நடைபவனி நேற்று காலை கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சுகாதாரதுறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பங்குபற்றலுடன் சம்மாந்துறையில் நடைபெற்றது.

காசநோய் பற்றிய விழிப்புணர்வு பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள், சுலோகங்களை ஏந்திக்கொண்டு சம்மாந்துறை வீதிகளில் இந்த விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

இவ்விழிப்புணர்வு நடைபவனியில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஆஸாத் எம். ஹனீபா, திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஆர். நியாஸ்அஹமட், மார்பு நோய் சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் திலீப் மபாஸ், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், வைத்தியத்துறைசார் ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



## சிறுமியின் மரணத்திற்கான காரணம் கண்டறியப்பட்டது

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி உயிரிழந்த 12 வயதுடைய சிறுமியின் மரணத்திற்கான காரணம் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுமியின் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகம்காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையின் விசேட நீதிமன்ற வைத்திய அதிகாரியினால் நேற்று முன்தினம் பூரண மரண பரிசோதனை அறிக்கை வெளியிடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதில் குறித்த சிறுமிக்கு நீண்ட நாள்களாக தாக்குதல் மேற்கொண்டதினால் ஏற்பட்ட காயத்தின் ஊடாக கிருமி சென்ற காரணத்தினால் மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சிறுமியின் மரணம் தொடர்பில் கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி பெண்கள் மூவர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த சிறுமியின் தாய் வெளிநாட்டில் சேவையாற்றுவதுடன் அவருடைய தாயின் சகோதரியின் அரவணைப்பில் குறித்த சிறுமி இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

## போதைப்பொருள் வியாபாரி உட்பட ஐந்து பேர் கைது

மட்டக்களப்பு,மார்ச் 25

மட்டக்களப்பு திரும்பெரும்துறை பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபாரி ஒருவர் உட்பட 5 பேரை நேற்று முன்தினம் இரவு பொலிஸார் கைது செய்ததுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து 200 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து திரும்பெரும்துறை பிரதேசத்தினை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது போதைப் பொருள்களுடன் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 25

வாழைச்சேனை ஹைறாத் வீதியில் நேற்று மாலை ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவரை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸாரும் இராணுவ புலனாய்வு அதிகாரிகளும் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக 2032 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள்களுடன் 31 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கேரளாக் கஞ்சாவுடன் பெண்ணொருவர் கைது

மூதூர்,மார்ச் 25

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைநகர் பகுதியில் கேரளா கஞ்சாவுடன் 42 வயதுடைய பெண்ணொருவரை, மூதூர் சிறு குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று பிற்பகல் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 2,200 மில்லிகிராம் நிறையுடைய கேரளா கஞ்சாமீட்கப்பட்டுள்ளதாகமூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பெண், வீட்டில் கேரளா கஞ்சா வியாபாரம் செய்து வருவதாக மூதூர் சிறு குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின்படி அவ்வீட்டை சோதனைக்குட்படுத்தியபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், வீட்டிலிருந்து கேரளா கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண், மூதூர் பொலிஸில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், அவரை மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை, மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவன் கைது

மட்டக்களப்பு,மார்ச் 25

மட்டக்களப்பு நகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவரை, இன்று அதிகாலை 12 மணியளவில் கைதுசெய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

லொயிஸ் அவனியூர் வீதியில், வீதிச் சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞனை நிறுத்தி சோதனையிட்டபோது, அவரிடமிருந்து 100 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன், அவரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பாலைமீன்மடு பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## திருக்கோவில் பிரதேச செயலக பெரிய நீர்ப்பாசனத்தின் சிறுபோகச் செய்கையின் ஆரம்பக் கூட்டம் நேற்று



திருக்கோவில்,மார்ச் 25

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பெரிய நீர்ப்பாசனத்தின் சிறுபோக நெல் செய்கையின் 2021 ஆம் ஆண்டுக்கான ஆரம்பகட்ட கூட்டம் பிரதேச செயலாளர் வீ.கஜேந்திரன் தலைமையில், திருக்கோவில் பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

நிகழ்வில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன.

1.வயல் பகுதியில் உள்ள வாய்க்கால்கள் சுத்தம் செய்யும் திகதி 2021/03/23 தொடக்கம் 2021/03/27 மார்ச் வரை சுத்தம் செய்யப்பட வேண்டும்.

2.பாச்சல் நில நீர் விநியோகம் 2021/03/ 27

3.வயல் நெல் விதைப்பு திகதி2021/03/31 தொடக்கம் 2021/03/12வரை.

4.இறுதி பாய்ச்சல் நீர் விநியோகம் 2021/7/15வரை

5.வயல் அறுவடை ஆரம்பம்,திகதி 2021/8/01. தொடக்கம் 2021/08/15

6.விதைக்கப்பட வேண்டிய நெல் இனம் 3 ஆரை மாதம் நெல் தொகுதி.

7காப்புறுதி கட்டும் திகதி 2021/4/20

8.கால்நடை மேய்ச்சல் தடைப்படும் காலப்பகுதி 2021/03/21 தொடக்கம்.

9.2021/08/20வரையான கால்நடைகள் அப்பகுதி மேய்ச்சலில் இருந்து தடைபடுகின்றது.

10. அறுவடை செய்யும் இயந்திரங்களின் கூலி டயர் 4,000 பட்டி 6,000.

11.உழுவு இயந்திர உழவுக் கூலி 6000/- ரூபா.

12.மேலும் கால்நடை அத்துமீறி வயல் நிலங்களுக்குள் நுழைந்தால் தண்ட பணமாக ஒரு கால் நடைக்கு 2,000/- ரூபா தண்டப்பணமாக வழங்கப்படும். என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## முச்சக்கர வண்டி விபத்து காரைதீவில் சாரதி காயம்

விற்பனைப்பொருள்களுடன் பயணித்த முச்சக்கர வண்டியொன்று மோட்டார்சைக்கிளுடன் மோதி நேற்று முன்தினம் மாலை காரைதீவு பிரதான வீதியில் விபத்துக்குள்ளானது.

முச்சக்கரவண்டி மோதியவேகத்தில் தலை கீழாகக்குடைசாய்ந்தது. சாரதிபடுகாயத்திற்குள்ளானதுடன் வண்டியும் சேதமடைந்தது. சம்மாந்துறைப் பொலிஸார் அவ்விபத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். படுகாயமற்ற வண்டிச்சாரதி வைத்தியசாலைக்குகொண்டுசெல்லப்பட்டதுடன்பொலிஸார்தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விபத்தில் இளைஞன் பலி

மட்டக்களப்பு, வாழைச்சேனை - திருகோணமலை வீதியிலுள்ள கதிரவெளிப் பகுதியில் மோட்டார் சைக்கிளொன்று, வீதியை விட்டுவிலகி, மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளைஞன் உயிரிழந்துள்ளார் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ள இந்த விபத்தில் வாகரையைச் சேர்ந்த 30 வயதுடைய ஆனந்தராஜா பார்த்தீபன் என்பவரே உயிரிழந்துள்ளார் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை வாகரை போக்குவரத்து பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# முதலாவது டெஸ்ட் போட்டி
## இலங்கை அணிக்கு வெற்றிவாய்ப்பு



இலங்கை – மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்ட நிறைவில் இலங்கை அணி மிகவும் வலுவான நிலையில் உள்ளது.

நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு விக்கெட்டை இழந்து 34 ஓட்டங்களை பெற்றிருந்தது. கிரெய்க் பிரத்வய்ட் 8 ஓட்டங்களுடனும் போனர் 15 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

தமது முதல் இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, மே.இ. தீவுகள் அணிகள் முறையே 169, 271 ஓட்டங்களைப் பெற்றன. அதனையடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸில்விளையாடி இலங்கை அணி 476 ஓட்டங்களைக் குவித்தது. பத்தும் நிசங்க 103, நிரோஷன் டிக்வெல்ல 96, ஒத பெர்னான்டோ 91, லஹிரு திரிமன்ன 76 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

வெற்றி இலக்கான 375 ஓட்டங்களைக் குறிவைத்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மே.இ.தீவுகள் விஸ்வ பெர்னான்டோவின் பந்துவீச்சில் முதலாவது விக்கெட்டை இழந்தது. ஜோன் கம்பெல் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 9 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 34 ஓட்டங்களைப் பெற்றுள்ளது மே.இ.தீவுகள் அணி.

இன்றைய இறுதிநாள் ஆட்டத்தில் 341 ஓட்டங்களைப் பெறும் இலக்கோடு மே.இ.தீவுகளும், மீதி 9 விக்கெட்டுக்களையும் வீழ்த்தும் முயற்சியோடு இலங்கை அணிலும் களமிறங்க வுள்ளன. போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30 க்கு ஆரம்பமாகும்.

# ஸ்டட்கார்ட் ஓபின் டென்னிஸ் நவோமி ஒசாகா விலகல்



ஸ்டட்கார்ட் ஓபின் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இருந்து உலகின் 2 ஆவது நிலை வீராங்கனையான ஜப்பானின் நவோமி ஒசாகா விலகுவதாக அறிவித்துள்ளார். அடுத்தடுத்து போட்டிகளில் பங்கேற்கவேண்டிய அழுத்தமும் குடும்பத்தினரைப் பிரிந்திருக்கும் இடைவெளியுமே அவரை இந்த முடிவினை எடுக்க வைத்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜேர்மனியில் ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில் ஒசாகா விளையாடாவிட்டாலும் நடப்பு சம்பியன் பெத்ரா குவித்தோவா, நம்பர் 1 வீராங்கனை ஆஷ்லி பார்தி, சிமோனா ஹாலெப், சோபியா கெனின், எலினா ஸ்விடோலினா, அரினா சபலென்கா, கரோலினா பிளிஸ்கோவா என தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் உள்ள 7 வீராங்கனைகள் பங்கேற்பதை உறுதி செய்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் மீண்டும் வேகம் எடுத்துள்ள நிலையில் இத்தொடர் பூட்டிய அரங்கில் நேரடிப் பார்வையாளர்களின்றி நடைபெற உள்ளது.

# டோக்கியோ ஒலிம்பிக் தீப தொடர் ஓட்டம் இன்று ஆரம்பம்

கொரோனா அச்சுறுத்தலால் ஒரு வருடத்துக்குத் தள்ளிவைக்கப்பட்ட டோக்கியோ ஒலிம்பிக் போட்டி ஜூலை 23 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 ஆம் திகதி திகதி வரை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவிருக்கிறது. இதையொட்டி ஒலிம்பிக் தீபத்தின் தொடர் ஓட்ட நிகழ்ச்சி ஜப்பானின் வடகிழக்கு நகரமான புகுஷிமாவில் இன்று தொடங்குகிறது.

2011 ஆம் ஆண்டு பெண்கள் உலக கோப்பை



கால்பந்து போட்டியில் ஜப்பான் அணி மகுடம் சூடிய போது, அந்த அணிக்குப் பயிற்சியளித்த நோரியோ சசாகி முதல் நபராக தீபத்தை ஏந்திச் செல்கிறார்.

முதல் நாளில் 15 பேர் தீபத்தைத் தாங்கி ஓடுகின்றனர். ஜப்பான் முழுவதும் 47 மாகாணங்களுக்கு மொத்தம் 121 நாள்கள் இந்தத் தீபம் பயணிக்கிறது. இதை பத்தாயிரம் பேர் தொடர் ஓட்டமாக எடுத்து செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வழமையாக தீப ஓட்டம் பெருத்த சனத்திரளுக்கு மத்தியில் வெகுவிமர்சையாக நடைபெறும். ஆனால் கொரோனா பரவல் இன்னும் கட்டுக்குள் வராததால் குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் மட்டுமே தொடர் ஓட்ட நிகழ்ச்சியைப் பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். அதுவும் சமூக இடைவெளி, கட்டாயம் முகக் கவசம் அணிவது உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் பார்வையாளர்களுக்கு விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சென்னை அணிக்கு புதிய சீருடை
## டுவிட்டரில் அறிமுகப்படுத்தினார் டோனி

ஐ.பி.எல். தொடரின் 14 ஆவது சீசனில் களமிறங்க உள்ள சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் புதிதாக வடிவமைக்கப்பட்ட சீருடை அணிந்து விளையாட உள்ளனர். சி.எஸ்.கே. அணித்தலைவர் எம்.எஸ்.டோனி தனது டுவிட்டர் பக்கத்தில் புதிய சீருடையை அறிமுகம் செய்துள்ளார்.

இந்திய இராணுவத்தை கௌரவிக்கும் வகையில் புதிய சீருடையின் தோள்பட்டைப் பகுதிகளில் இராணுவ சீருடையின் வர்ணம் உபயோகிக்கப்பட்டுள்ளது.




சென்னை சூப்பர் கிங்ஸ் அணி இம்முறை ஐ.பி.எல். தொடரில் தனது முதலாவது போட்டியில் டெல்லி கப்பிடல்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப்போட்டி ஏப்ரல் 10 ஆம் திகதி மும்பையில் நடைபெறும்.

# ஸ்ரேயாஷ் ஐயர் காயம் இங்கிலாந்துத் தொடரில் விளையாடமாட்டார்



இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் தோள்பட்டைப் பகுதியில் காயமடைந்த இந்திய அணிவீரர் ஸ்ரேயாஷ் ஐயர், மீதமுள்ள இரண்டு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புனேயில் இடம்பெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் பாட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த ஸ்ரேயாஷ் ஐயருக்கு இடது தோளில் காயம் ஏற்பட்டது.

அவருக்கு அறுவை சிகிச்சை தேவைப்படுமா? அல்லது ஓய்விலிருக்கவேண்டுமா? போன்ற தகவல்கள் இதுவரை வெளியாகாத நிலையில் காயத்தில் இருந்து ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அவர் குணமடைவது கடினமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக இருக்கும் ஸ்ரேயாஷ் ஐயர், தொடரின் ஆரம்பப் போட்டிகள் சிலவற்றையாவது தவறவிடவேண்டியிருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பிலிருந்து இந்தியா விலகியமை தமிழருக்குச் செய்த மாபெரும் துரோகம்!

## இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் சிதம்பரம் காட்டம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஆதரவாக இந்தியா வாக்களிக்காமல் விலகியிருந்தமை தமிழர்களுக்குச் செய்த மாபெரும் துரோகம் என காங்கிரஸின் மூத்த தலைவர் பி.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று (புதன்கிழமை) வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் இலங்கை பற்றிய தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்காமல் இந்தியா புறக்கணித்திருப்பது தமிழர்களுக்கும் தமிழர் உணர்வுகளுக்கும் பா.ஜ.க. அரசு செய்த மாபெரும் துரோகம் மற்றும் மாபாதகச் செயல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தச் செயல் ஒன்றே போதும் எனவும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை எதிர்த்து எதிர்வரும் தேர்தலில் ஒருமனதாகத் தமிழக வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், பச்சைத் துரோகத்துக்குத் தகுந்த தண்டனையைத் தமிழ்நாடு வழங்க வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ள அவர், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், அரசின் வற்புறுத்தலால் ஐ.நா. மனித உரிமை அமைப்பின் தீர்மானத்தைப் புறக்கணித்தார் என்றால், தமிழர்களின் உணர்வுகளை மதித்து அவர் பதவி விலக வேண்டும் என சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

# தீர்மானம் நிறைவேறினாலும் பொருளாதாரத் தடை வராது!

## அரசு நம்பிக்கை



மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்க முடியாது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையால் மட்டுமே விதிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரங்களைக் கொண்ட பெரும்பான்மையான உறுப்பு நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பேரவையில் தெரிவிக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி அதிகாரப் பகிர்வு தொடர்பான உறுதிப்பாட்டை நிறைவேற்ற இந்தியா அழைப்பு விடுத்திருந்தது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, தேர்தல் தொடர்பான பேச்சு இடம்பெறுவதாகவும் அடுத்த கூட்டத்தில் அமைச்சரவை அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்படும் என்றும் கூறினார்.

# புகைப்பிடித்தலை ஊக்குவித்தமை குறித்து விமல் மீது சட்ட நடவடிக்கை எடுக்குக!




புகைப்பிடிப்பதை ஊக்குவித்தமை தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் பொலிஸாரிடம் கோரப்பட்டுள்ளது.

அமைச்சர் வீரவன்ஸ, அண்மையில் ஆயுர்வேதக் கூறுகளுடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள இலவங்கப்பட்டை அடிப்படையிலான சிகரெட்டை உள்ளூர் சந்தையில் அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்நிலையில், வீரவன்ஸவால் ஊக்குவிக்கப்பட்ட இலவங்கப்பட்டை அடிப்படையிலான சிகரெட் வகைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய ஆணையகம் எச்சரித்திருந்தது.

சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்திடம் ஒப்புதல் பெறாமல், சிகரெட்டைச் சந்தைக்குக் கொண்டுவருவது சட்டத்தை மீறும் செயலென குறித்த ஆணையகத்தின் சட்டத் தலைவர் விராஜ் பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலவங்கப்பட்டை அடிப்படையிலான சிகரெட்டுக்கு அனுமதி வழங்கவில்லை என ஆயுர்வேத திணைக்களமும் சுகாதார அமைச்சும் புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய ஆணையகத்துக்கு அறிவித்துள்ளன.

இந்நிலையில், புகைப்பிடிப்பதை ஊக்குவிப்பதற்காக அமைச்சர் விமல் வீரவன்ஸ மீது சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நாம் எந்தவோர் இனத்தையும் இலக்கு வைக்கவே இல்லை!

## சிறிதரனின் கேள்விக்கு அமைச்சர் விதுர சளாப்பல்

கொழும்பு, மார்ச் 25

இலங்கையில் வடக்கு, கிழக்கில் மாத்திரம் அல்லாது சகல பகுதிகளிலும் உள்ள தொல்பொருள் பகுதிகளையும் ஆய்வு செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது என தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள், கிராமிய சிற்ப கலைகள் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க சபையில் தெரிவித்தார்.

தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் எந்தவோர் இனத்தையும் இலக்கு வைக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான சிறிதரனால் தொல்பொருள் விடயங்கள் தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இதன்போதே சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகிய எம்.பிக்கள் இந்த தொல்லியல் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிப் பணிகளை கடுமையாக எதிர்த்தமையுடன் உடனடியாக இது நிறுத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினர். இதற்கு பதில் தெரிவித்த போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

தொல்பொருள் ஆய்வுகள் என்ற பெயரில் எந்தவோர் இனத்தையும், மதத்தையும் இலக்கு வைத்து நாம் செயற்படவில்லை. அதேபோல் எந்தவோர் இனத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றும் அல்ல.

இந்த எல்லைகளை தாண்டிநாம் செல்ல வேண்டும் என்றே நினைக்கின்றோம். பௌத்த பகுதிகள் மட்டுமல்லாது இந்து ஆலயங்களையும் மீள் நிர்மாணம் செய்ய நாம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

எனவே ஆய்வுகளின் மூலமாக மட்டுமே நாட்டின் தொன்மையான பகுதிகளைக் கண்டறிய முடியும். அதற்கு இடமளிக்க வேண்டும்.

ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும், இந்த தொல்பொருள் பிரதேசங்கள் பௌத்தர்களுக்கோ அல்லது இந்துக்களுக்கோ சொந்தமானவை அல்ல. இது முழு உலகிற்கும் சொந்தமானவை. அதனைவிளங்கிக்கொள்ளவேண்டும்.

நாம் தெற்கில் ஆய்வுகளை செய்யாதுவடக்கில்மட்டும்ஆய்வுகளை செய்கின்றோம் என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. ஆனால் இந்த பூமியில் எவ்வளவு தொல்லியல் பகுதிகள் உள்ளன என எம்மால் கண்டறிய முடியாதுள்ளது.

வடக்கில் மட்டும் அல்ல கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான பிரதேசங்கள் உள்ளன. எனவே அதனை கண்டறிய எமக்கு அனுமதிக்க வேண்டும்.

நாம் அனைவரும் இணைந்து இந்த முயற்சியைக் கையாள வேண்டும். அதற்கு உங்களின் ஒத்துழைப்பு வேண்டும். இந்த முயற்சிகள் மூலமாக ஓர் இனத்தின் உரிமையை மாத்திரம் முன்னிறுத்தவில்லை. இதனை விளங்கிக்கொள்ள வேண்டும். நாம் இது தொடர்பாக ஆழமாகப் பேசி தீர்மானம் எடுப்போம். - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org